## காய்கறிகளுக்கான விலை முன்னறிவிப்பு

### தக்காளி

தேசிய தோட்டக்கலை வாரியத்தின் இரண்டாவது முன்கூட்டிய அறிக்கையின்படி, 2020-21 ஆம் ஆண்டு இந்தியாவில் தக்காளி 8.52 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு 210.03 இலட்சம் டன்கள் உற்பத்தியாகும் என்று அறிவித்துள்ளது. இந்தியாவில், மத்திய பிரதேசம், ஆந்திர பிரதேசம், கர்நாடகா, தெலுங்கானா, ஒடிசா மற்றும் மேற்கு வங்காளம் ஆகியவை தக்காளி அதிகமாக உற்பத்தி செய்யும் மாநிலங்களாகும். இந்த ஆண்டு தக்காளி உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்களான மத்திய பிரதேசம், மகராஷ்ரா மற்றும் கர்நாடகாவில் பருவ மழை பெய்ததால் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டில், கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், திருப்பூர், தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்கள் தக்காளி உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும். தமிழ்நாட்டில், ஆண்டு முழுவதும் தக்காளி முக்கிய பருவங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. கோயம்புத்தூர் மற்றும் ஒட்டன்சத்திரம் சந்தைகளுக்கு நாச்சி பாளையம், முத்தம்பட்டி, செட்டிபாளையம், ஆலந்துறை, உடுமலைபேட்டை, தாராபுரம், கவேரியம்மாபட்டி, கன்னிவாடி மற்றும் மணப்பாறை ஆகிய பகுதிகளிலிருந்து தக்காளி வரத்து உள்ளது.

### கத்தரி

தேசிய தோட்டக்கலை வாரியத்தின் இரண்டாவது முன்கூட்டிய அறிக்கையின்படி, 2020-21 ஆம் ஆண்டு இந்தியாவில் கத்தரி 7.58 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு 131.54 இலட்சம் டன்கள் உற்பத்தியாகும் என்று அறிவித்துள்ளது. மேற்கு வங்காளம், ஒடிசா, குஜராத், பீகார் மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்கள் கத்தரி உற்பத்தியில் முக்கிய பங்களிக்கின்றன. தமிழ்நாட்டில், தருமபுரி, கிருஷ்ணகிரி, திண்டுக்கல், திருவண்ணாமலை மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்கள் கத்தரி பயிரிடுவதில் பெரும்பங்கு வகிக்கின்றன.

வர்த்தக மூலங்களின்படி, கோயம்புத்தூர் மொத்த சந்தைக்கு நாச்சிப்பாளையம், கேளம்பாளையம் மற்றும் பூலாம்பட்டி ஆகிய பகுதிகளிலிருந்து கத்தரி வரத்து உள்ளது. மைசூரிலிருந்து ஏற்கனவே கத்தரி வரத்து தொடங்கியுள்ளது.

**வெண்டை**

தேசிய தோட்டக்கலை வாரியத்தின் இரண்டாவது முன்கூட்டிய அறிக்கையின்படி, **2020-21** ஆம் ஆண்டு இந்தியாவில் வெண்டை, **5.11** இலட்சம் எக்டர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு **62.19** இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில், சேலம், தேனி, தருமபுரி, திருவள்ளூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் வெண்டை அதிகளவு உற்பத்தி செய்யப்படுகிறது. கோயம்புத்தூர் சந்தைக்கு, திருச்சி, தலைவாசல், வைகுண்டம் மற்றும் ஒட்டன்சத்திரம் ஆகிய பகுதிகளிலிருந்து வெண்டை வரத்தானது அதிகளவு காணப்படுகிறது.

இச்சூழலில், விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இயங்கி வரும், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டம், ஒட்டன்சத்திரம் சந்தையில் கடந்த **14** ஆண்டுகளாக நிலவிய தக்காளி, கத்தரி மற்றும் வெண்டை விலை மற்றும் சந்தை ஆய்வுகள் மேற்கொண்டது. ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் அறுவடையின்போது தரமான தக்காளியின் பண்ணை விலை ரூ. **35** முதல் ரூ. **40**, வரையும், நல்ல தரமான கத்தரியின் பண்ணை கிலோவுக்கு ரூ. **25**, முதல் ரூ. **27**, ஆகவும் மற்றும் தரமான வெண்டையின் பண்ணை விலை ரூ. **20** முதல் ரூ. **22**, வரை இருக்கும் என்று அறியப்படுகிறது. வடகிழக்கு பருவமழை தொடங்குவதை பொறுத்து காய்கறிகளின் விலையில் மாற்றங்கள் இருக்கும். எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனைகளின் அடிப்படையில் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

*உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்*

*வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்*

*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*

*கோயம்புத்தூர்-**641 003***

*தொலைபேசி- **0422-2431405***

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

*பேராசிரியர் மற்றும் தலைவர்*

*காய்கறிப் பயிர்கள் துறை*

*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*

*கோயம்புத்தூர் - **641 003.***

*தொலைபேசி எண் - **0422-6611374***

## Price Forecast for Vegetables

### Tomato

According to the Second Advance Estimates of National Horticulture Board (2020-21), the area under tomato is 8.52 lakh hectares with a production of 210.03 lakh tonnes. The major tomato growing states are Madhya Pradesh, Andhra Pradesh, Karnataka, Telangana, Odisha and West Bengal. During this year, unseasonal rainfall in key producing states Madhya Pradesh, Maharashtra and Karnataka made steep increase in the prices. In Tamil Nadu, Krishnagiri, Dharmapuri, Salem, Tiruppur, Theni and Dindigul district are the major cultivation clusters for tomato. Tomato is grown throughout the year in all major seasons. Fresh arrivals are coming to Coimbatore and Oddanchatram wholesale market from Natchipalyam, Madhampatti, Chettipalayam, Aalandurai, Udumalpet, Dharapuram, Kaveriammapatti, Kannivadi and Manaparai.

### Brinjal

According to the Second Advance Estimates of National Horticultural Board (2020-21) the area and production of brinjal in India are expected to be around 7.58 lakh hectares and 131.54 lakh tonnes respectively. West Bengal, Odisha, Gujarat, Bihar and Madhya Pradesh are major brinjal producing states of the country. Brinjal is grown in Dharmapuri, Krishnagiri, Dindigul, Tiruvannamalai and Vellore districts in Tamil Nadu. As per trade sources, current arrivals are coming from Natchipalayam, Kalampalayam and Poolampatti. Arrivals of brinjal from Mysore has already started.

**Bhendi**

According to the Second Advance Estimate of National Horticulture Board (2020-21), the area under bhendi is 5.11 lakh hectares with production of 62.19 lakh tonnes. The major bhendi cultivating districts in Tamil Nadu are Salem, Theni, Dharmapuri, Thiruvallur, Coimbatore and Madurai. As per the trade sources, most of the current arrivals to Coimbatore market are coming from Trichy, Thalaivasal, Vaikuntam, and Ottanchathiram.

The TN-IAM Project funded Price Forecasting Scheme of the Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University analyzed the past 14 years prices of tomato, brinjal and bhendi that prevailed in Oddanchathiram, Trichy and Coimbatore Uzhavar shandies. As per the results of the analysis, the price of good quality tomato during harvest would be around Rs.35-40 per kg. Good quality of brinjal price will rule around Rs. 25-27 per kg and good quality of bhendi price will rule around Rs. 20-22 per kg. Based on the North East Monsoon in the ensuing season, there will be little fluctuations in vegetable prices. Hence, farmers are advised to take up sowing decision accordingly.

***For further details contact:***

*Domestic and Export Market Intelligence Cell*

*Centre for Agricultural and Rural Development Studies*

*Tamil Nadu Agricultural University*

*Coimbatore – 641 003.*

*Phone: 0422-2431405*

***For technical details please contact:***

*Professor and Head*

*Department of Vegetable crops*

*Horticultural college & Research Institute*

*Tamil Nadu Agricultural University*

*Coimbatore -641003.*

*Phone -0422 -6611374*